# SENDALAI

By

S. R. BALASUBRAHMANYAN M. A., L. T.,
HEADMASTER,
SIR SIVASWAMI AYYAR HIGH SCHOOL,
TIRUKATTUPALLI.

Printed at
THE CAUVERI COLOUR PRESS,
KUMBAKONAM.
1954

# செந்தலை-வரலாறு

செந்தலை என்பது தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர். இது பூதலூர்ப் புகைவண்டி நிலையத்திற்கு ஏழுமைல் தூரத்தில் காவிரி நதியின் கிளையான குடமுருட்டி நதிக்கரையில் உள்ளது. இவ்வூர் முற்காலத்தில் **'சந்திர லேகை சதுர்வேதி மங்கலம்'** என்று வழங்கப்பட்டது. இவ்வூரில் ஒரு பழைய சிவன் கோயில் இருக்கிறது. இக்கோயில் முற்காலத்தில் திருப்பெருந்துறை மகாதேவர் ஆலயம் என்று வழங்கப்பட்டது. தற்போது இது சுந்தரேசுவரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இக்கோயிலின் தலபுராணத்தைக் கவனிப்போம். இதன் படி இவ்வூர், கிருத யுகத்தில் **'பிர்மவனம்' 'பிர்மாரண்யம்'** என்றும், திரேதாயுகத்தில் **'ஜம்புகாசுவகம்'** என்றும், துவாபர யுகத்தில் **'பிரகத் கச்சம்'** என்றும், கலியுகத்தில் **'சந்திரலேகை'** என்றும் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

பிரமதேவன் தன் அகங்காரத்தை ஒழிக்க இக்காட்டில் உள்ள சிவபெருமானைப் பூசித்து மேன்மை பெற்றான். ஆகவே இவ்வூர் 'பிர்மாரண்யம்' என்று வழங்கப்பெற்றது.

அடுத்த படியாக 'ஜம்புகாசுவகம்' என்ற பெயருக்கு உரிய காரணத்தைக் கவனிப்போம். அசுவசேனன் என்ற பாண்டிய மன்னனுக்குப் பிரமராதர் (பிரமராயர்) என்ற மந்திரி இருந்தார். மன்னனுக்குக் குதிரைகள் வேண்டியிருந்ததால், அவன் தன் மந்திரி, பிரமராதரைக் குதிரைகள் வாங்கிவர ஏராளமான பொருள்களுடன் அனுப்பினான். அம்மந்திரியோ சிவ பக்தர் ஆதலால் 'கோயில் திருப்பணி' 'தேவபூஜை' முதலிய நற்செயல்களில் பொருளை எல்லாம் செலவழித்தார். பிறகு பாண்டிய மன்னன் கோபங்கொண்டதும், பிர்மாரண்ய க்ஷேத்திரத்தில் உள்ள சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கி அரசனிடம் ஒப்படைத்துப்பக்தனைக்காத்ததும், பரிகள் நரிகள் ஆனதும், பாண்டிய மன்னன் பிரமராதரைத் தண்டிக்க முயன்றதும், வேகவதி நதி கரைபுரண்டு ஓடியதும், சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்ததும், பாண்டிய மன்னனின் பிரம்பால் அடியுண்டதும் முதலிய திருவிளையாடற் புராணச் சம்பவங்கள் இவ்வூரில்

E014131
Saraswathi Mahal Library, Thanjavur

எழுந்தருளியுள்ள பெருமானின் திருவிளையாடல்களாகவே கூறப்பட்டுள்ளன. பிரமராதர் அல்லது பிரமராயர் என்பது மாணிக்கவாசகருக்குப் பாண்டிய மன்னன் அளித்த பட்டப் பெயரான "தென்னவன் பிரமராயன்" என்பதை ஞாபகப் படுத்துகிறது. நரி பரியான விந்தையை இவ்வூரில் எழுந்தருளி யிருக்கும் பெருமான் திருவிளையாட்டாகச் செய்ததனுல்தான் 'ஜம்புகாசுவகம்' என்ற பெயர் இவ்வூருக்கு வழங்கலாயிற்று.

கல்வெட்டுகளின் மூலம் இவ்வூரின் பழங்காலப் பெயர் திருப்பெருந்துறை என்றும், இதில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானின் திருநாமம் திருப்பெருந்துறை மகாதேவர் என் றும் அறிகிறோம். இப்பெயர்கள் தலபுராணக்கூற்றுக்கு ஒத்ததாக அமைந்துள்ளன. ஆனால் மாணிக்கவாசக சுவாமிகள் ஆட்கொள்ளப்பட்ட திருப்பெருந்துறையோ தற்போது ஆவு டையார் கோயில் என்று வழங்கப்படுகிறது. ஆகவே முரண் பாடு ஏற்படுகிறது. இக்கோயிலுக்கும் மாணிக்கவாசகர் திருப்பணி செய்தார் என்றால் இருபெருந்துறைகள் ஏற்படு கின்றன. இல்லையேல், திருப்பெருந்துறை பெரும்புகழ்பெற்ற மாணிக்கவாசகர் காலத்துக்குப் பிறகுதான், அப்புகழ்பெற்ற திருப்பதியின் பெயரை இவ்வூருக்கும் இட்டிருக்கவேண்டும் என்று கொள்ளவேண்டும். அவ்வாறாயின், கி. பி. 781-ஆம் ஆண்டிலேயே செந்தலைக் கல்வெட்டு ஒன்றில், இக்கோயில் "திருப்பெருந்துறை மகாதேவர் கோயில்" என்று குறப்பிடப் படுவதால், மாணிக்கவாசகரின் காலம் கி. பி. 781-க்கு நிச்சயமாக முற்பட்டிருக்கவேண்டும் என்று ஊகிக்க இடம் ஏற்படுகிறது. இப்பொழுது கிடைத்திருக்கின்ற ஆதாரங்களைக் கொண்டு மாணிக்கவாசகர் காலத்தைப்பற்றி ஒரு தீர்ந்த முடிவு கூறமுடியாது. சமீபத்தில் மாணிக்கவாசகரைப்பற்றிய வடமொழிக்காவியம் ஒன்று திருவனந்தபுரத்துப் புத்தகக் கருவூலத்தில் உள்ளதாக அறிகிறோம். அக்காவியத்தின் மூலம் ஏதேனும் புதிய சான்று கிடைக்குமா என்று நாம் ஆவலு டன் எதிர்பார்க்கிறோம்.

'சந்திரலேகை' என்று இவ்வூருக்குப் பெயர் ஏற்பட்டதன் காரணத்தைத் தலபுராணம் பின்வருமாறு கூறுகிறது:—

சந்திரலேகை என்பவள் ஒரு கந்தருவப் பெண். அவள் கண்வர் என்ற முனிவரின் தவத்தைக் கலைத்ததால் அவருடைய சாபத்துக்கு இலக்கானாள். பூமியில் மானிடப் பெண்ணாகப்

பிறந்தாள். சாபவிமோசனத்தின் பொருட்டு அம்முனிவரின் கட்டளைப்படி 'பிர்மாரண்யம்' என்ற இத்தலத்தை அடைந்து, கடுந்தவம் செய்தாள். திருப்தி அடைந்த சிவபெருமான் அர்த்தநாரிஉருவத்தோடு 'சந்திரலேகை'க்குத் தரிசனம் கொடுத்து அனுக்ரகித்தான். சிவபெருமானிடம் 'சந்திர லேகை' தன் பெயரால் 'சந்திரலேகை' என்றே இவ்வூர் அழைக்கப் படவேண்டும் என்றும், தான் அருள் பெற்ற மாசி மாத சுக்கில பட்ச சப்தமியில் காவேரியில் நீராடி இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் மகாதேவனை வழிபடுகிறவர் யாவரும் மோக்ஷ பதவியை அடைய வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டாள். ஆகவே இவ்வூருக்குச் 'சந்திர லேகை' என்ற பெயர்வழங்கலாயிற்று என்பர்.

இக்காரணம் எவ்வாருயினும், இக்கோயிலிலுள்ள ஒன்பதாம் நூற்ருண்டுக் கல்வெட்டுக்கள் இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை "ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பிரமதேயம் சந்திரலேகை சதுர்வேதி மங்கலத்துத் திருப்பெருந்துறை மகாதேவர்" என்றே வழங்குகின்றன. அந்தணர்கள் வாழும் ஊரை, 'சதுர்வேதி மங்கலம்' என்பதும் அந்தணர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட ஊரைப் 'பிரமதேயம்' என்பதும் பண்டைய மரபுகளாம்.

இக்கோயிலின் கல்வெட்டுக்களில் இருந்து சில அரிய செய்திகள் கிடைத்துள்ளன. இக்கோயில் எப்பொழுது உண்டாயிற்று என்று சொல்வதற்கில்லை. ஆனல் கி. பி. 781ல் இருந்தே 'திருப்பெருந்துறை மகாதேவர் கோயில்' என்று வழங்கப்பட்டது என்ற செய்தி கல்வெட்டுச் சான்றுகளால் புலப்படுகிறது. தஞ்சையில் ஆண்ட ஆதிச் சோழர்களில் ஒருவனுகிய ஆதித்த சோழன் காலத்தில் (கி. பி. 871—907) இது முழுக் கருங்கற் கோயிலாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆதித்த சோழன் பெயரால் **'ஆதித்த வதி'** என்ற ஒரு வழி இருந்ததாகப் பிற்காலத்திய கல்வெட்டு ஒன்ருல் அறிகிருேம்.

ஆதித்த சோழனின் 9ஆவது ஆண்டில் (கி. பி 880) ஒரு முக்கிய தானம் செய்யப்பட்டது. வயிரமேகபடாரன் என்பான் இக்கோயிலில் ஒரு அம்பலத்தை எடுப்பித்திருந்தான். அவ்வம்பலத்தில் தினந்தோறும் ஸ்ரீ மகாபாரதம் வாசிப்ப

தற்குப் பெரும்புலியூர் ஆத்திரேய கோத்திரத்து வைகானஸ ஸூத்திரத்துச் சிங்கிநந்தீசுவர பட்டனுக்கு இறையிலியாக இவ்வூர்ச் சபையார்கள் 53-ஆங் குடும்பிலுள்ள ஒரு பங்கு நிலத்தைத் தானம் செய்தார்கள். நிலத்தைப் பிற்காலத்தில் **உண்பவர்களும்** (அனுபவிக்கிறவர்களும்) பாரதம் வாசிக்கக் கடமைப்பட்டவர்கள் என்ற நிபந்தனைக்கு உட்பட்டவர் ஆனார்கள்.

பெருங்குறி சபையார் சந்திரலேகை சதுர்வேதிமங்கலத்தின் ஸ்தல ஸ்தாபனத்தை நிர்வகித்துவந்த பெருமக்கள் ஆவர். இச்சபையாருக்குப் பல உரிமைகளும் கடமைகளும் இருந்தன என்பது பல தென்னாட்டுக் கல்வெட்டுக்களிலிருந்தும் தெரிய வரும். நிலங்களை வாங்கவும் அவற்றைப் பொதுத்தொண்டிற்காகத் தானம் செய்யவும், அத்தான சம்பந்தமான சாசனத்தைக் கோயிலின் கற்சுவர்களின் மீது பொறிக்கவும் இச் சபையார் உரிமை பெற்றிருந்தனர் என்பது புலனாகிறது.

மேலும், மேற்படி தான நிலம் 53-ஆம் குடும்பில் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. **குடும்பு** என்பது தற்காலத்தில் (Ward) வார்டு என்ற ஊர்ப்பகுதியைக் குறிக்கும். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள 'உத்தர மேரூர்க் கல்வெட்டுக்கள் ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தில் பெயர்போனவை. குடவோலைத் தேர்தல் முறையைக் கையாண்டு, அவ்வூர் நிர்வாகத்தைப் பல வாரியங்கள் (committees) நடத்திவந்தன. தமிழ்நாட்டுத் தேர்தல் முறையை விளக்கும் கல்வெட்டுக்களில் உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள் பிரசித்திபெற்றவையாகும். ஓட்டு உரிமை உடையவர்களின் தகுதியையும், ஓட்டு உரிமை பெற அருகதை அற்றவர்களையும், தேர்தல் நடத்தும் முறையையும் வெகு அழகாக, கி. பி. 921-இல் இவ்வூர்க் கல்வெட்டுக்கள் விளக்குகின்றன. ஸ்தல நிர்வாகத்தில் தலை சிறந்து விளங்கிய உத்தரமேரூரில் 30 குடும்புகள் தான் இருந்தன. ஆனால் செந்தலை ஆகிய சந்திரலேகை சதுர்வேதிமங்கலத்திலோ, முற்கூறிய உத்தர மேரூர்ச் சாசனத்துக்கு 42 ஆண்டுகட்கு முன்பே குறைந்தது 53 குடும்புகளாவது இருந்து இருக்கவேண்டும் என்றால் செந்தலை என்பது தனிப்பட்ட பெருமையை உடைய மாபெரும் ஊராகத் திகழ்ந்திருக்கவேண்டும் என்பது ஒரு தலையாகப் புலனாகிறது.

தற்காலத்தில் பஞ்சாயத்துச் சட்டத்தை இயற்றி ஸ்தல சுயஆட்சியைநிலைநாட்ட நம் மாகாணக்காங்கிரஸ் சர்க்கார் முன் வந்துள்ளார்கள். இந்த ஸ்தல சுய ஆட்சிமுறை 9-ஆம் நூற்றுண்டில் சீரிய முறையில் நம் நாட்டில் நடைபெற்று வந்தது. ஆதலின் இச்சுய ஆட்சி நமக்குப் புதியது அன்று. நாம் ஆண்டு பிறகு இழந்த பழைய உரிமையையே மீண்டும் பெறுவதாகும். ஆனல் பண்டைய சூழ் நிலையில் நம் முன் னேர்கள் வெற்றிகரமாகச் சுய ஆட்சியை நடத்தி வந்தனர். அந்நிய ஆட்சியினுல் மாறுபட்ட நிலையும் மனப்பான்மையும் உடைய மக்களின் தன்மை மாறினல்தான் தற்காலச் சீர் திருத்தம் வெற்றிபெற இயலும். ஒற்றுமையும் பொதுத் தொண்டில் ஆர்வமும் வெற்றிக்கு அவசியமானவை.

ஆதித்த சோழனுக்குப் பிறகு பராந்தக சோழன் சோழ நாட்டை ஆண்டான். இவன் காலத்தில் வீரசிகாமணிப் பேரேரி என்ற ஏரி ஒன்று வெட்டப்பட்டது. வடகவிர நாட்டுப்பள்ளியுடைய கனகஸேன படாரன் கையால் கற் குடிப்பள்ளியுடைய ஆரம்ப வீரனேன் 150 **ஈழக்காசு** (இலங்கை நாணயம்) பெற்று இவ்வேரி திருத்தும் தர்மம் நிறைவேறியது. வீரசிகாமணி என்பது பராந்தகனின் பட்டப் பெயர். இப்பட்டப் பெயரால் இவ்வேரிக்கு அப்பெயர் ஏற்பட் டிருக்கவேண்டும். பராந்தகன் இலங்கையைவென்ருன். அதனல் ஈழக்காசு தமிழகத்தில் வழங்கலாயிற்று. இவ்வேரி தூர்ந்து போயிற்று. இவ்வேரியின் இருப்பிடம் சரியாகவிளங்கவில்லை. வர கூருக்குஅருகே சமீபகாலம் வரையில் இருந்த ஏரியாக ஒருகால் இது இருக்கக்கூடும். **பள்ளி, கனகஸேனன்** என்றபெயர்களைக் கொண்டு அக்காலத்தில் செந்தலையின் பக்கத்தில் சமணர்களின் பள்ளி ஒன்று இருந்ததாக அறிகிருேம். கற்குடி என்பது (கரிக் குடி) தற்காலம் கள்ளுக்குடி, கல்விக்குடி என்ற பல பெயர் களால் வழங்கும் ஊர்போலும்.

தஞ்சையின் பல பகுதியில் சமணர்கள் சமீப காலம் வரையில் வாழ்ந்து வந்தனர். சமணப்பள்ளிகளும் இருந்து வந்தன. திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் சமணர்களுடைய பள்ளி ஒன்று இருந்திருக்கவேண்டும். பள்ளி என்ற முடிவே சமணர்களது இருப்பிடத்தைக் குறிக்கும். இதற்கு ஏற்பத் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகேயுள்ள 'விஷ்ணம்பேட்டை' என்ற ஊரிலுள்ள நீர்ப்பாசன வாய்க்காலில் இருந்து

சமண தீர்த்தங்கரரில் ஒருவரான மகாவீரரின் சிலை ஒன்று கிடைத்திருக்கிறது. அதை திருக்காட்டுப்பள்ளி ஸர் சிவஸ்வாமி ஐயர் உயர்நிலைப்பள்ளியின் கலைக்கூடத்தில் காணலாம்.

தற்காலம் **'கடுங்கால்'** என்று வழங்கும் பாசன வாய்க்கால் இப்பராந்தக சோழன் காலத்திலேயே இருந்ததாக மற்றொரு கல்வெட்டியிலிருந்து அறிகிறோம். சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்தப் பாசன வாய்க்கால் 'கடுங்கால்' என்ற பெயரோடு இருந்தது என்ற செய்தி நமக்கு வியப்பைத் தருகிறது.

இரண்டாம் ஆதித்த சோழன் (கி. பி. 955-969) இராசேந்திரன் என்ற கங்கைகொண்ட சோழன், குலோத்துங்க சோழன் I என்ற பல சோழ மன்னரின் கல்வெட்டுக்கள் இக் கோயிலின் சுவர்களில் காணப்படுகின்றன.

போசள (Hoysala) அரசனான வீரராமநாதனுடைய கல்வெட்டும் இங்கே உள்ளது.

செந்தலைக்கு 'மற்றொரு சேர்க்கைப் பெருமையும் உண்டு. சுந்தரேசுரர் கோயிலுக்கு முன் ஒரு மகாமண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டது. இதற்கு வேண்டிய தூண்கள், அழிவுற்ற நியமத்துப் பிடாரி கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்டன. இந்நியமத்துப் பிடாரி கோயிலைச் சேர்ந்த தூண்கள் மீது பல அறிய கல்வெட்டுகள் உள்ளன.

நியமம் என்பது செந்தலையிலிருந்து மேற்குத்திசையில் கல்லணைக்குச் செல்லும் வழியில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. தற்காலத்தில் இதை 'நேமம்' என்று அழைக்கிறார்கள். இவ்வூர் பண்டைப் புகழ் பெற்றது. பழங்கல்வெட்டுக்களில் இது 'நியமம் என்ற ஆயிரந்தளி' என்று குறிப்பிடப்படுகிறது. களப்பிரர்கள் என்ற குழுவைச் சேர்ந்த முத்தரையர்கள் நியமத்தைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் ஆண்டு வந்தனர். சங்ககாலச் சோழர்கள் அழிவுற்ற பின்பு இம் முத்தரையர் என்ற வகுப்பாரே தஞ்சை, வல்லம் முதலிய பகுதிகளை ஆண்டு வந்தனர். இம் முத்தரையர்களிடம் இருந்து தான் கி. பி. 850ல் சோழவம்சத்து அரசனான விஜயாலய சோழன் தன் தோள்

வலியால் தஞ்சையைக் கைப்பற்றிச் சோழ வம்சத்தை அங்கு நிலைநாட்டினன்.

இம் மண்டபத்தில் நான்கு தூண்களிலுள்ள கல்வெட்டுச் செய்திகள் பின்வருமாறு:

1. பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறனின் புகழ்
2. பாண்டிய மாறஞ் சடையனின் 10 ஆம் ஆண்டுச் சாசனம் (கி. பி. 775)
3. தெள்ளாறு எறிந்த நந்திப் போத்தரையனான பல்லவ மன்னனின் 12 ஆம் ஆண்டுச் சாசனம் (கி. பி. 838)
4. சோழ ராஜகேஸரி வர்மனின் 18 ஆம் ஆண்டுச் சாசனம் (கி. பி. 889)

**பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன்:**

இவனுடைய கல்வெட்டே நியமத்துப் பிடாரி கோயில் கல்வெட்டுக்களில் முக்கியமானது. இக் கல்வெட்டின் மூலம் சுவரன்மாறனின் மூன்று தலைமுறை வீரர்களின் பெயர் கிடைத்துள்ளன.

1. பெரும்பிடுகு முத்தரையனான குவாவன் மாறன்
2. அவன் மகன் இளங்கோவதிரையனாகிய மாறன் பரமேசுவரன்
3. அவனுடைய மகன் பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன்.

இக் குடும்பத்தினர் குறு நில மன்னர்கள். பல்லவ மன்னர்களின் சிற்றரசர்கள். இவர்களுடைய தலை நகரம் நியமம்.

இக் கல்வெட்டின் முகப்பிலேயே இச் சுவரன் மாறன் எடுப்பித்த பிடாரி கோயிலும், அவன் எறிந்த ஊர்களும் அவன் பேர்களும் அவனைப் பாடினார் பேர்களும் இத்தூண்கள் மேல் பொறிக்கப் பட்டன என்று நாம் அறிகிறோம்.

சுவரன் மாறனுடைய பேர்கள் ஸ்ரீ மாறன், ஸ்ரீ சத்ரு கேஸரி, ஸ்ரீ கள்வர் கள்வன், ஸ்ரீ அதிஸாஹஸன், ஸ்ரீ அபிமான தீரன் என்பவை.

அவனைப் பாடினார் பேர்கள் பின்வருமாறு:

1. பாச்சில் வேள் நம்பன்
2. கோட்டாறு இளம்பெருமானார்

3. கிழார்க் கூற்றத்துப் பவதாய மங்கலத்து அமருண் ணிலே ஆயின குவாவங்காஞ்சன்
4. ஆசாரியர் அநிருத்தர்

சுவரன்மாறன் காஞ்சியில் ஆண்ட இரண்டாம் நந்திவர்ம பல்லவ மன்னனின் (கி. பி 710-775) சிற்றரசன். இவன் ஒரு சிறந்த போர்வீரன். வாள்மாறன் என்று புகழ்பெற்றவன். அழுந்தூர், மணலூர், கொடும்பாளூர், காரை, புகழி, கண்ண னூர், (க்கொப்பம்?) காந்தளூர், அண்ணல் வாயில் (அன்ன வாசல்) என்ற ஊர்களில் தன் பேரரசனுக்காகப் பாண்டியரோடு போர்கள் செய்து வெற்றிபெற்றான். 'தஞ்சைக்கோன்' 'வல்லக்கோன்' என்று இவன் புகழப்படுவதால் இவ்வூர்கள் சுவரன்மாறனால் வென்று ஆளப்பட்ட ஊர்கள் என்று அறியலாம். இவன் பாணர்களை அன்போடு ஆதரித்தான். இவனுடைய அரிய வீரச்செயல்களையும், கொடைச் சிறப்பினையும் இவனுடைய பாணர்கள் பாடியுள்ள பாடல்களிலிருந்தே அறிதல் பொருத்தமாகும்.

நியமத்துத் தூண்களில் பொறிக்கப்பட்டுள்ள இதர கல்வெட்டுக்களாவன:

1 பாண்டியன் மாறஞ்சடையனின் 10 ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி. பி 775). இதன்படி மாகாளப் பிடாரியாருக்கு ஒரு திரு விளக்கினுக்கும் திரு அமுதுக்கும் ஒரு நிலதானம் கொடுக்கப்பட்டது.

2 பல்லவ மன்னனான தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திப் போத்தரையனின் பன்னிரண்டாம் ஆண்டில் (கி. பி 838) நியம மாகாளத்துப் பிடாரியாருக்கு 40 பழங்காசு கொடுத்து ஒரு திரு அமுதுக்கும் ஒரு நந்தா விளக்குக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட தருமம் அக்கல் வெட்டில் கூறப்பட்டுள்ளது.

3 மற்றொரு கல்வெட்டு சோழ ராஜ கேஸரி வர்மனான ஆதித்த சோழனின் 18 ஆம் ஆண்டில் (கி. பி 889) நியம மாகாளத்துப் பிடாரியாருக்கு ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்கு மாறம்பாவை என்பவள் 12 கழஞ்சு பொன் உதவினாள் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.

எனவே கி. பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் நடந்த அரிய சம்பவங்களைத் தற்காலம் சிதைந்தலையில் நிற்கும் நியமத்துத் தூண்கள் அறை கூவுகின்றன என்பது வெளிப்படை.

## SENDALAI



East Main Gopuram



Southern face – Image of Brahma separately installed



Southern face-carved pillar Bhutagana frieze and the inscribed wall containing 9th and 10th century inscriptions of Rajakesarivarman alias Aditya I and Parantaka I. Chola kings.



Garbhagraha and Vimana of the Central Shrine-morden Sundareswara Shrine (old temple of Tirupperundurai Mahadeva)-Northern face.

# SENDALAI

Sendalai is a small village about 2 miles east of Tirukattupalli, on the road to Kandiyur and it is situated on the southern bank of the Kudamurutti, a branch of the Kaveri.

It has an old temple, now known as the Sundareswara temple but according to the inscriptions on its walls, it was known in the past as the temple of Lord **Mahadeva of Perundurai** situated in Chandralekhai Chaturvedimangalam (the ancient name of Sendalai) included in **Arcottukkurram** and this again formed part of **Pandya Kulasani Valanadu** during the days of Chola hegemony. This is said to be a **Brahmadheya** village.

There are about 40 inscriptions on the walls of this temple covering the period of nearly 500 years from the latter part of the 8th Century A. D. (Circa. 781 A. D.) to the 13th century (1265 A. D.).

The earliest name of the deity of this temple is Lord Mahadeva of **Tirupperundurai**, and it is mentioned in an inscription of the 16th year of a Pandyan king Maranjadaiyan, and this inscription is found on a stone on the left of the entrance to the Vigneswara shrine in the western prakara of this temple-not on the vimana of the main shrine. And the earliest inscription on the walls of the central shrine is that of the 2nd year of the early Chola king Rajakesarivarman, who may be identified with Aditya I

(871-907 A. D.) and the Anbil copper plates of the Cholas mention, to the credit of Aditya I, the building in honour of Siva tall stone temples on both banks of the Kaveri from the Sahyadri mountains (the western ghats) to the ocean. From this we have to infer that the temple of Sendalai too should have been in the early period a brick structure and it was built of stone in the latter part of the 9th century A. D. by Aditya I or his subjects.

Another interesting point to consider here is the name of Tirupperundurai. We know that this is the name of the place where the famous Saiva Saint Manikka-vasagar attained his enlightenment and spiritual beatitude.

Whether this place was in any way connected with the life of this saint, we don't know. Anyhow, it seems reasonable to assume that it was named after the illustrious place hallowed by the memory of the great saint.

The next point to discuss is the identification of Maranjadaiyan, the Pandya king in whose 16th year one Nili Narani made a gift of 8 kalanjus of gold from whose interest a day lamp (பகல் விளக்கு), was to be burnt in the shrine of Lord Mahadeva of Tirupperun-durai. The managers of the temple (koil udaiyar) agreed to burn the lamp, and the gift was placed under the protection of the Perumakkal of the place and the Maheswaras.

Here is the text of the inscriptions :—

"ஸ்வஸ்திஸ்ரீ கோமாறஞ் சடையற்கு யாண்டு 16வது திருப்பெருந்துறை மஹா தேவர்க்கு கரிக்குடி

சாந்தோ கரணி நாராயணன் மாறன் பிராம்மணி நீலி நாரணி பகல் விளக்கு எரிப்பதாக வைத்த பொன் எண் கழஞ்சு. இப்பொன் கொண்டோம். இதன் பலிசை யால் பகல் விளக்கு எரிப்போமானோம். திருப்பெருந் துறை திருக்கோயிலுடையோம். இவ்வூர் பெருமக் களும் மாஹேஸ்வரரும் இரக்ஷை''

There are many inscriptions with the name of Maranjadaiyan and more than one Pandya king has assumed the name of Maranjadaiyan and so the identification becomes difficult, and I am inclined to identify him with the famous Pandya ruler **Jatilavarman Parantaka Nedunjadaiyan** *alias* **Varaguna Maharaja** whose accession is fixed at about 765 A. D. for the following reasons:- Varaguna made extensive conquests as far north as the Pennai river in the Tondainadu. There is a record of the 8th year of Maranjadaiyan at Kumbakonam then called Kudamukku.

At Niyamam 4 miles away from this place, a Servant of Videl Vidugu Mutharaiyan made a gift of land for a lamp and food offerings to Makala Pidari of Niyamam in the **10th year of Maranjadaiyan.** Further the Trichinopoly inscription of this king clinches the issue. In the 4th year 2501th day, that is about his 10th year, **Maranjadaiyan alias Pandiyadhiraja Varaguna deva** gave a gift of 125 kalanjus of gold to Tirumal Bhatarar (at Trichirapalli) while he was staying at Niyamam after destroying the walls of the fort of **Vembil** (Perhaps identifical with modern Veppathur).

Here is the text:—

''கோமாறஞ் சடையற்கு யாண்டு நான்குநாள் இராயிரத்தைன்னூற்றென்று வேம்பில் மதில் அழிந்

துப் போந்து நியமித்திருந்தருளி...பாண்டியாதிராஜன் வரகுண தேவர் திருமால் படாரருக்குக் கொடுத்த பொன் பாடிக் காலால் 125 கழஞ்சு (Symbol)."

Based on this circumstantial evidence, I think that we may draw the inference that the **Maranjadaiyan** of this place is identical with **Varaguna Pandya** who ascended the throne about 765 A. D. If this inference is correct, then the inscription of Maranjayan which mentions the deity of Mahadeva of Tirupperundurai should have existed earlier than 781 A. D., that is more than 1170 years ago. How long earlier, we are not in a position to guess, as so many things of the past shrouded in mystery.

About this period, it has to be remembered that the Chola power had become completely eclipsed and the Pallavas (Dantivarman 775-826 A. D.) and Nandivarman III of Tellaru fame (826–849 A. D.) in the north and the Pandyas in the south (Varaguna 765-815 A. D.) were the two powerful royal dynasties that ruled over this part of the Tamil land. And it was on the decline of the Pandyas and the Pallavas about the middle of the 9th Century A. D. that the Cholas of Tanjore under Parakesari Vijayalaya (850-871 A. D.) and Aditya Rajakesarivarman, (871-907 A. D.) rose to power, and started a new era of expansion and glory for South India.

Nearly a century rolled on when we came to the reign of the Chola ruler Rajakesari Varman alias Aditya I (871-907 A. D.) I have already stated that the present temple might have been built of stone

# SENDALAI



Nataraja and Sivakami Amman-front view.



Chandrasekhara-Siva and Parvathi-front view.



Nataraja and Sivakami Amman -back view.



Chandrasekhara-Siva and Parvathi-back view.

in his reign. In an inscription of his second year (873 A. D.) three persons make a gift of 15 kalanjus of gold from whose interest the managers of the temple agreed to give an Olaku of ghee for the burning of a perpetual lamp to Mahadeva, of Tirupperundurai situated in the Brahmadeya (village of) Chandralekhai Chaturvedimangalam which formed a part of **Arcottukkuram**. (Arcot is a small village 3 miles to the south west of Tirukattupalli)

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜ கேஸரிவர்மருக்கு யாண்டு 2ஆவது ஆற்காட்டுக் கூற்றத்து பிர்ம்ம தேயம் சந்திர லேகை சதுர்வேதி மங்கலத்து திருப் பெருந்துறை மஹாதேவர்க்கு,"

It is here for the first time that we learn that it was a brahmadeya village, a village given as a gift to brahmans and it was called **Chandralekhai Chaturvedimangalam** whose corruption is **Sendalai**, its modern name.

Another important inscription of the 9th year of this ruler (880 A D.) deserves special mention and therefore to be quoted in extenso:—

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜ கேஸரிவர்மற்குயாண்டு 6-ஆவது ஆர்க்காட்டுக் கூற்றத்து பிர்ம்மதேயம் சந்திர லேகை சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி சபையோம் இவ்வூர் ***ஐம்பத்து மூன்ரும் குடுப்பில் பாரதப் பங்குக்*** கோயிலாங் நாகநந்தி விற்றபங்கு [1] இவ்வொரு பங் கும் இவ்வூர் பிர்ம்மஸ்தானத்து மீய்செங்கிளி நாட்டு வெண்ணையிலுடையான் வயிரமேக படாரன் எடுப் பித்தஅம்பலத்து இருந்து ***நிசதியும் ஸ்ரீபாரதம் வாசிக்க*** பெரும்புலியூர் ஆத்ரேய கோத்திரத்து வைகானஸ ஸூத்திரத்து சிங்கிநந்தீசுவர பட்டனுக்கு

இறையிலியாகக் குடுத்தோம் ஸபையோம். இந்நிலம் பின்பு இப்பங்குண்பார் இவ்வூர் பிர்ம்மஸ்தானத்தே இருந்து நிசதியும் ஸ்ரீ பாரதம் வாசித்துண்பதாக. இப்பங்கொன்றும் சந்திராதித்தவத் இறையிலியாகப் பணித்து கல்மேல்வெட்டிக் குடுத்தோம். பெருங்குறி ஸபையோம்.''

This document is very important and interesting from many points of view:- The great Assembly (Perumguri Sabhai) of this place bought a piece of land (One **pangu**) and donated it to a person for the expounding everyday of the Mahabharata in the hall of the temple built by one **Vennaiyil Udayar Vaira Megha Bhataran** and the land was made **tax free** and it was further stipulated that it was to be enjoyed by the present donee and in future so long as the sun and moon endure by one who did this service in the hall of the temple.

And we learn further that this **Pangu** of land was in the 53 **Kudumbu** of the place. The word **Kudumbu** means to use a modern expression 'ward.' It is interesting to recall that in 921 A. D. the sabha of Uttirameru Chaturvedimangalam made detailed arrangements for the election by pot tickets (Kudavolai) of the members of the various committees of the general assembly and prescribed their qualifications and disqualifications. Uttiramerur had only 30 wards whereas Chandralekhai Chaturvedimangalam had more than 53 wards, i. e. nearly twice the size of Uttiramerur. The functioning of these local self-governing bodies earlier than Uttieramerur by 42 years is of great significance in the history of local self-government in

Southern India. There are other inscriptions of this ruler in this temple which mainly refer to gift of lands and food offerings to the deity.

Three inscriptions of Parakesarivarman who can be identified with the Parantaka I (acc. 907 A. D.) the son and successor of Aditya I are found here. One of them makes an endowment of 150 Illakasu for the construction of a tank called (**Virasikhamanip pereri** and providing stone steps therefor.

On the South wall of the main shrine there is an inscription of the 4th year of Parakesarivarman "who took the head of the Pandya" that is Aditya II (955-969 A. D.) and it makes an endowment of land for burning three **Sandi** lamps and for special food offerings to Ganapati.

On the west wall there is an incomplete record of Rajendra Chola the conqueror of Gangai and Kadaram (acc. 1012 A. D)

An inscription of the 44th year of Kulottunga I (that is 1114 A. D.) provides for the gift of oil and food offerings on Saturdays to Lord Mahadeva of Tirupperundurai in Chandrelekhai Chaturvedimangalam.

Nearly after the lapse of a century and a half subsequent to the previous record we have on the second Gopura of the temple an inscription of the 10th year of the Hoysala king Viva Ramanatha (that is 1265 A. D.) but the inscription is too mutilated to make any sense.

Thus we get only a few glimpses of the past glory of this place.

Some of the sculptures of stone found in this temple have been removed from this temple to the Art gallery housed in the palace at Tanjore and these belong to the 9th century A. D. the period of Adiya I (acc. 871 A. D.) in whose reign the present central shrine of the temple should have been built.

## Further Note on Sendalai.

Sendalai has also an additional importance. There are four granite stone pillars used for the construction of the mandapa in front of the temple. These pillars originally belonged to the temple of **Makalattup-Pidariyar** of **Niyamam** (modern Nemam) about 4 miles to the west of Sendalai. Niyamam was the capital of local tribal chiefs called the **Muttaraiyars**, who had played a distinuguished part in the 8th & 9th centuries in S. India.

On these pillars we have an inscription of the 10th year of **Pandya Maranjadaiyan**: an inscription of Pallava **Nandivarman III** (826–849 A. D.) in addition to the original inscription of **Perumpidugu Mutharaiyan** alias **Svaran Maran** the general of the Pallava King **Nandivarman Pallava-malla II** (710–775 A. D.) The last chieftain constructed a temple to **Makalattup Pidariyar** at **Niyamam**. The places he destroyed, his birudas, the names of the poets who sang his praise, and the Tamil songs they composed in honour of this



Inscription of the 24th year of Rajakesarivarman alias Aditya I.

## SENDALAI



Local Legends sculptured in the Eastern Gopuram I-st tier.

chief are inscribed on those four pillars. The inscription mentions three generations of Muthariyars and they are:

Perumpidugu Mutharaiyan *alias*
Kuvavan Maran
|
Ilangovadi Muthariyan *alias*
Maran Parameswaran
|
Perumpidugu Mutharaiyan *alias*
Svaran Maran

The following are some of the birudas of Perumpidugu Muthariyan alias **Svaran Maran**:—

Sri Maran
Sri Satrukesari
Sri Kalvarkalvan
Sri Adisahasan
Sri Abhimanadhiran.

The following are the names of the Tamil Poets:—

Vel Namban of Pachil
Ilamperumanar of Kottaru
Kuvavan Kanjan
Achariyar Aniruddhar.

பெரும்பிடுகு முத்தரையனுன சுவரன் மாறனின் தலைவனும், பல்லவப் பேரரசனும் ஆன ***இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லனின்*** வரலாறு பின் வருமாறு:- அவன் ஆண்ட காலம் (கி. பி. 710—775.):

பல்லவர்கள், காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்தனர். அவர்களுடைய துறைமுகப்பட்டினம் ***மாமல்லபுரம்.*** சுமார் கி. பி. 600-லிருந்து கி. பி. 710-வரையில் சிம்மவிஷ்ணு வம்சத்தைச்சேர்ந்த பல்லவ மன்னர்கள் தமிழ் நாட்டை ஆண்டுவந்தார்கள். அவர்களில் சிறந்தவர்கள், மகேந்திரவர்மனும் அவன் மகன் முதலாம் நரசிம்மவர்மனும் ஆவர். இந்த வம்சத்துக் கடைசிப் பல்லவ அரசன் இரண்டாம் பரமேசுவரன். இவன் திடீரென்று இறக்கவே பல்லவ வம்சமானது வார்சுகளின்றித் தத்தளித்தது.

இப்படி இருக்கக் காஞ்சிமாநகரக் குடிமக்களும், மந்திரிகளும், அரச பட்டத்திற்கு உரிமையுடைய ஒருவனைத் தேர்ந்தெடுக்க முயன்றார்கள். பரமேசுவரவர்மனுடைய குல முதலாகிய சிம்மவர்மனின் தம்பி வம்சத்தில் தோன்றிய ஹிரண்யவர்மனை அணுகி, அவனுடைய சந்ததிகளில் ஒருவரை அரசனுக்க உதவவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

இராஜ்ஜியத்தைக் கொடு, கொடு என்பார் நிற்க அவனுடைய சந்ததியார்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் வேண்டாம் என்று தப்பினார்கள். ஹிரண்யவர்மனது நான்காவது மகனை பரமேசுவரன் என்ற பல்லவ மல்லன் மாத்திரம் 'தான்போவேன்' என்று துணிந்து நின்றான். ஹிரண்யவர்மன் மனங்கலங்கினான். ஆனால் தன் மந்திரியினுடைய ஆறுதலின் பேரில் காஞ்சிக்கு அனுப்ப மனம் துணிந்தான். பன்னிரண்டு பிராயமுடைய பல்லவ மல்லனுக்குக் காஞ்சியில் சாமந்தர்கள் மகுடாபிஷேகம் செய்வித்து நந்திவர்மன் என்னும் அபிஷேகநாமம் வழங்கினர். இவன் அறுபத்தைந்து ஆண்டுகள் சிறப்புடன் அரசு நடத்தினான். இவனுடைய காலத்தில் இவனால் வழங்கப்பெற்ற நான்கு செப்பேடுகள் இப்பொழுது கிடைத்துள்ளன. (1) உதயேந்திரம், (2) காசாக்குடி, (3) தண்டந்தோட்டம், (4) பட்டத்தாள்மங்கலம்.

இவன் ஒப்பற்ற வீரன். ஆகையால் இவனுக்கு ***ஏகதீரன்*** என்ற பட்டப்பெயருண்டு. பல்லவரது பட்டத்திற்குப் போலி உரிமை கொண்டாடிய சித்திரமாயன் இவனுக்குப் பல இன்னல்கள் புரிந்தான். பாண்டிய மன்னனை நெடுஞ்சடையன் சாளுக்கிய வம்சத்து இரண்டாம் விக்கிரமாதித்தன் முதலியவர்கள் நந்திவர்மனை எதிர்த்துப் பல போர்கள் புரிந்தார்கள். இப்போர்களில் பேருதவி புரிந்த வீரர்கள் பல்லவச் சிற்றரசர்களான வில்வலத்தில் வாழ்ந்த உதயசந்திரனும் நியமத்தில் வாழ்ந்த பெரும்பிடுகு முத்தரையனுன சுவரன்மாறனும் ஆவர்.

நந்திவர்மன் காஞ்சியில் வைகுண்டபெருமாள்கோயில் என்று ஒரு கோயில் கட்டுவித்தான். இக்கோயில் அக்காலத்தில் பரமேசுவரவிண்ணகரம் என்று வழங்கப் பெற்றது. இம்மன்னன் காலத்தில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வாரது மங்கள சாஸனமும் இக்கோயில் பெற்றுள்ளது.

[S. R. B.]

# செந்தலை
## சுந்தரேசர் கோயில் மண்டபத் தூண்களில் தற்காலம் காணப்படும் நியமத்துக் கல் வெட்டுப் பாடல்கள்

இப்பாட்டுக்கள் வெண்பாவாகவும் கட்டளைக் கலித்துறை யாகவும் காணப்படுகின்றன. இவற்றுட் சில சிதைந்துபட்ட நிலையில் உள்ளன. இப்பாடல்கள் அரசர்களுடைய சிறப்பைக் கூறுவதோடு இலக்கியவளம் சான்றனவாய் உள்ளன. இவற்றிற்கு ஓராற்றான் உரைவரைந்து ஈண்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

### முதல் தூண் – வடபுறம் – மேற்பகுதி

மூத்த பெரும்பிடுகு முத்தரையனாயின குவாவன் மாறனவன் மகன் இளங்கோவடி யரையனாயின மாறன் பரமேசுவரனவன் மகன் பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன் மாறனவன் எடுப்பித்த பிடாரி கோயில் -- வன் எறிந்த ஊர்களும் அவன் பேர்களும் அவனைப் பாடினார் பேர்களும் இத்தூண்கள் மேல் எழுதின இவை.

**மேற்புறம்:**

1. ஸ்ரீ மாறன். 2. ஸ்ரீ சத்ருகேஸரி. 3. ஸ்ரீ கள்வர்கள்வன். 4. ஸ்ரீ அதிஸாஹஸன்.

**கீழ்ப்புறம் பச்சில் வேள் நம்பன் பாடின:**

1. வெங்கட் பொருமாசேர் வெல்கொடியான் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க — அங்குவந்தார்
தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
ஊரழுந்தி யூரென்று மூர்.

கொடிய கண்களையுடைய, போர்செய்கின்ற விலங்கு பொருந்திய, போரில் வெற்றி கொள்ளும் கொடியை உடைய, வாள் ஏந்திய பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறனுடைய, சிவந்த கண்களையுடைய கரிய யானைகள் போர்க்களத்தில் சென்று பகைவர்களைக் கலக்கியதால், அங்கு இறந்து



Somaskanda decorated for a festival



Somaskanda-Siva, Skanda and Parvati-front view



Somaskanda-Siva, Skanda and Parvati-back view

போன வீரர்களுடைய தேர்கள் பூமியில் அழுந்தவும், குதிரைகளும் பூமியில் பதியவும், அவ்வுடல்களிலிருந்து வெளிப்பட்ட இரத்தம் நிலம் முழுவதும் பரவியது. இப்படி எல்லாம் அழுந்திப்போன ஊரை அழுந்தியூர் என்று கூறுவர்.

குறிப்பு:- அக்காலத்து முத்தரையர்கள் வலிமை மிக்க பேரரசர் பக்கல் சேர்ந்து வாழ்ந்தனர். அக்காலத்தில் வலிமை மிக்கவர் பல்லவர் ஆதலின் அவரது இடபக் கொடியே இச்சுவரர் மாறனுக்கும் கொடியாயிற்றுப் போலும்.

**தென்புறம்:**

2. (ஒழுகு குருதி யுடனெப்ப) வோடிக்
கழுகு கொழுங்குடர் கவ்வ— விழிகட்பேய்
புண்ணளைந்து கையும்பர்ப் போர்மணலூர் வென்றதே
மண்ணளைந்த சீர்மாறன் வாள்.

பகைவரோடு போர் நிகழ்ந்த மணலூரிலே, ஆறு போலப் பெருக்கு எடுத்து ஓடும் இரத்தத்துடன் தாமும் ஓடிச் சென்று, கழுகுகள் நன்கு கொழுத்த குடர்களைக் கவர்ந்து செல்லும்படியாகவும், இரண்டு பக்கங்களிலும் விழித்த கண்களை உடைய பேய்கள் மேல் இருந்து இறந்தோர் உடற் புண்களைத் துழாவும்படியாகவும், உலகத்தைத் துழாவிய சிறப்பும் பொருந்திய சுவரன்மாறனுடைய வாளாயுதம் வென்றது.

குறிப்பு:- இவ்வடைப்புக் குறிகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் கல்வெட்டில் சிதைந்து போயினமையால் சிதைந்த இடத்தை நிரப்புவதற்கு ஊகித்தமைக்கப்பட்டன வாகும்.

**கோட்டாறிளம் பெருமானார் பாடின:**

3. நிற்கின்ற தண்பணை தோன்றுந்தஞ் சைத்திறம்பா டிநின்றார்
விற்கின்ற வீரர்கள் ஊர்கின்ற இப்பிண குன்றுகள்மேல்
நெற்குன்ற யானை ... ... ... ... .... ... ... ... ...
... ... .... ... ... ... ... ... ... .... ... ... ... ...

மிக ஓங்கி வளரும் மூங்கில்கள் தோன்றும் தஞ்சையின் சிறப்பைப்பாடி நின்ற புலவர்கள், பகைவருடைய பிணங்களை

அடுக்கியதால் ஏற்பட்ட குன்றுகளின் மேல், வில்லில் வல்ல வீரர்கள் ஊர்ந்து செல்கின்ற, நெற்போரைப்போல் காணப் படும் யானைகளைப் பரிசு பெறுவர் என்பதாம்.

**மேல்புறம்:**

4. மறப்படை மீனவன் வல்லவன் பல்லவன்சே னைக்கன்று
   புறப்பட மாறு பொருகளிற்று ... ... ... ... ... ...
   ... ... ... ...... ... ... ... ... ... ... ... ... ... ...
   ... ... ... ...... ... ... ... ... ... ... ... ... ... ...

வலிய படைகளை உடைய பாண்டியன், வல்லவனாகிய சுவரன் மாறனை உடைய பல்லவனின் சேனையோடு போர் செய்யப் புறப்பட்ட அன்று மாறுபட்டுப் போர் செய்த யானையின்......

**வடபுறம்:**

5. பால்கொண்ட செவ்வாய் விளையா மொழிப்பரு
   வத்துமுன்னம்
   வேல்கொண்ட மாறன் ......... ... ... ... ... ... ... ...
   ... ... ... ... ... ... ......... ... ... ... ... ... ... ...
   ... ... ... ... ... ... ......... ... ... ... ... ... ... ...

தாய்ப்பால் குடிக்கும் சிவந்த வாயிலே உச்சரிப்பு நன்கு அமைந்த, மழலை நீங்கிய சொற்கள் உண்டாவதன் முன்னமேயே வேலைக் கையில் எடுத்துக்கொண்ட சுவரன் மாறன்...

**கீழ்ப்புறம்:**

6. எங்கை யளவிற்றே பாண இகல்வீக்கு
   மங்கை செருவேல் மாவல்ல (மாறன்கை)
   ......... ... ... ... .......... ... ... ... ...
   ......... ... ... ... .........

ஏ பாடுதலில் வல்ல பாணனே! மாறுபாட்டை மிகுவிக்கும் அழகிய கைகளையும் போரில் பயன்படும் வேலையும் உடைய குதிரைகளைச் செலுத்துவதில் வல்ல சுவரன் மாறனுடைய கைகள் எம் கைகளைப் போன்ற அளவை மட்டும் உடையன ஆகுமோ.

## இரண்டாவது தூண் — வடக்கு உச்சி

### பாய்ச்சில் வேள் நம்பன் பாடின

7. (அல்லிற் பிரிந்தா)ர்க்கே அல்லையாய்க் காலந்தான்
முல்லைக்காய் முற்படுமோ என்றென்று- வல்லக்கோன்
காரைவாய்ப் போர்வென்ற வேல்மாறன் கைபோலும்
காரைவாய்க் கேளேனே கண்டு

தலைவன் பிரிவின்கண் கார்காலம் கண்ட தலைவி காரொடு புலந்து சொல்லியது இப்பாடல்: இராக்காலத்தில் தலைவரைப் பிரிந்து வருந்தும் தலைவியர் பக்கல் பரிவுடன் நடந்துகொள்ளாமல், உன்னுடைய காலமாகிய கார்காலமானது முல்லைச் செடியை மலருவிப்பதற்கு மாத்திரம், உரிய காலத்திலும் முற்பட்டுத் தோன்றுமோ என்று வல்லத்தரசனாகிய, காரை என்ற ஊரில் போரில் பகைவர்களை வென்ற வேலை ஏந்திய சுவரன் மாறனுடைய கைகளைப்போலக் கைம்மாறு கருதாமல் உலகுக்குக் கொடுக்கும் மேகங்களைக்கண்டு கேட்காமல் இருப்பேனே?

**மேல்புறம்:**

8. வஞ்சிப்பூச் சூடிய வாளமருள் வாகைப்பூக்
குஞ்சிக் கமழ்கண்ணிக் கோமாறன் — தஞ்சைக்கோன்
கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெறிந்தான்
தோளால் உலகளிக்கும் தோள்

வஞ்சிப்பூச் சூடிப் பகைவர்மேல் மாறுபாடு காரணமாகச் சென்று நிகழ்த்திய வாட்போரில் வெற்றிபெற்று, வாகைப் பூவால் ஆகிய மாலையை மயிர் முடியில் வாசனை வீசும் முடி மாலையாக அணிந்த கோமாறனும், தஞ்சை அரசனும், பிற விலங்குகளைப் பற்றிக்கொள்ளும் சிங்கம்போன்ற வலிமையால் கொடும்பாளூரில் பகைவர்களைக் கோபித்து அழித்தவனுமாகிய சுவரன் மாறனுடைய தோள்களே, உலகைக் காப்பாற்றும்தோள்களாம்.

**கீழ்ப்புறம்:**

9. எருவை புறஞ்செலாத் தோய்ந்தனவா லெங்கும்
வருபுனல்சூழ் வல்லக்கோ மாறன்— செருவில்
மறங்கூர்வாய்ப் பட்டா ருடல்குடைந்து மாந்திப்
புறங்கூர்வாய்க் கொண்டெழுந்த புள்.

எங்கும் ஆற்றில் வருகின்ற நீரால் சூழப்பட்ட வல்லத்து அரசனுகிய மாறனுடன் செய்த போரில் வீரம் நிரம்பிய இடங்களில் இறந்தவர்களுடைய உடல்களைக் குடைந்து வயிருர உண்டு, மீண்டும் கூரிய வாயலகுகளில் கொண்டு வெளிக் கிளம்பிய பறவைகளாகிய கழுகுகள் எங்கும் வெளிச்செல்ல முடியாதபடி இரத்தத்தில் தோய்ந்தன.

***அடிப்பகுதி—வடபுறம்***

10. பேரிலைப் பங்கயங் கூம்பப் பிறையின் குறுமுளைபோந்
தீரிலை கொள்ளும் பதத்தில் இணையா ரரணமுட்டக்
கூரிலை ... ... ... ... ... ... ... ... ... ...... ...... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ...... ...... ...

பெரிய இலைகளையுடைய தாமரைகள் குவிந்து கொள்ளும் படித் தோன்றுகின்ற பிறைச் சந்திரனைப்போன்று, சிறிய பிராயத்திலேயே பகைவர்களுடைய அரண்கள் முழுவதையும் கூரிலை வேலால் வென்ருன்.

11. சொற்புகு தொண்டைக் கனிபுகு தூமதி போன்முகத்தாள்
பொற்புக வெற்புப் புகுதிகண் டாய்புக ழிப்பொருதார்
கற்புக விற்புகக் கண்டவன் கள்வர்கள் வன்றஞ்சை
நற்புக (ழான்கரம் போற்கொடை காலுங் கருமுகிலே)

கார்காலத்து வருவதாகக் கூறி வினைமுற்றி மீளும் தலைவன், தான் செல்லுவதன் முன் தலைவியின் ஊர்நோக்கி மழை பெய்யச் சென்ற கார்மேகத்தை நோக்கிக் கூறியது.

புகழி என்ற ஊரில் எதிர்த்துப்போர் செய்த பகை வேந்தர்கள் மலையில் ஓடி ஒளியும்படித் தன் வில்லின் திறலை வெளிப்படுத்தியவனும் கள்வர் கள்வன் என்ற பட்டப் பெயர் உடையவனுமாகிய தஞ்சையில் நல்ல புகழ் பெற்று ஆளுகின்ற அரசனுகிய சுவரன் மாறனுடைய கைகளைப் போலக் கைம்மாறு கருதாமல் கொடுக்கும் தொழிலை வெளிப் படுத்தும் கார்மேகமே! சொற்களைச் சொல்லும் தன்மை பொருந்திய கொவ்வைக்கனியை உடைய களங்கமற்ற சந்திரனைப்போன்ற முகத்தை உடைய என் தலைவி, நின் வரவால் 'கார்காலம் வந்துவிட்டதே, இன்னும் தலைவர் மீண்டுவரவில்லையே' என்ற எண்ணத்தால், அழகு அழியும்படி

SENDALAI



Sivakami Amman a closer view

நீ மலையை நோக்கி மழை பொழியச் செல்கின்றாயே இச்செயல் உனக்கு ஏற்றது அன்று என்பதை அறிவாயாக.

**அடி—கீழ்ப்புறம்**

12. சேட்டிணர்பூந் தண்பொழில் செம்பொன்மா ரிக்க டியரணம்
மூட்டின சீற்றமு முன்சென் றதன்பின் பகட்டினத்தின்
... ... ... ... ... ... மாறன் கடிநகர்
... ... ... ... ... ... ... ... ... ... ... ...

பெருமை பொருந்திய கொத்துக்களாயுள்ள பூக்களை யுடைய குளிர்ந்த சோலைகளையும், சிவந்த பொன்னை மழை போல் செலவிட்டுக் கட்டிய அஞ்சத்தக்க அரண்களையும், கோபித்து அழித்த கோபமும் முன்னே நீங்கிவிட்டது; அதன்பின் யானைக் கூட்டங்களைக் கவர்ந்தான் சவரன் மாறன்; அவனுடைய காவல் பொருந்திய நகரம்......

**அடி—தென்புறம்**

13. பனையைப் பகடுகூ டாவன்று பல்லவன்வெல் லத்தென்னன்
முனையைக் கெடச்சென்ற மாறன் முகிலிவளர் பீலியுந்தச்
சுனையச் சுனைமணிப் பாறையப் பாறைசொல் என்விளைந்த
வினையைப் (பறிப்பவன் திக்கி னிலங்கு புகழ்வனே)

போர் செய்த அக்காலத்தில் பல்லவன் வெல்லும்படி யாக அவனுக்குத் துணைபூண்டு பாண்டியனுடைய போர் முனையைக் கெடும்படிச் செய்தவனும் பகைவருடைய நல் வினையை அழிப்பவனும் எட்டுத் திக்கிலும் விளங்கும் புகழுடையவனுமாகிய சுவரன்மாறனுடைய முகிலி என்ற ஊரில் சுனைகளின் பக்கத்தில் தோகை வளர்ந்த ஆண் மயில் கள் ஆடும். அங்கே சுனையின் பக்கத்தில் மாணிக்கப் பாறைகள் இருக்கும். அப்பாறையில் என்ன விளையும் என்று கூறவேண்டுமானல் அங்கு வளர்ந்த பனை மரங்களை ஆண் யானைகளும் சுற்றி வளைக்கமுடியாது என்று கூறலாம்.

**மேற்பகுதி—தென்புறம்**

**கிழார்க் கூற்றத்துப் பவதாய மங்கலத்து அமருண்ணிலே ஆயின குவாவங் காஞ்சன்பாடினபாட்டு மூன்றும் தூண் மேலன எல்லாம்**

1. ஸ்ரீ தமராலயன், 2. ஸ்ரீ அபிமான தீரன், 3. ஸ்ரீ கள்வர் கள்வன், 4. ஸ்ரீ சத்ருகேஸரி.

**மேற்பகுதி—கீழ்ப்புறம்**

14. ஏறி விசும்பும் இருநிலமாய்த் தென்பரால்
மாறன் செருவேல் மறங்கனன்று—சீறக்
கொடிமாடத் தண்கொடும்பை கூடாத மன்னர்
நெடுமா மதிலிடிந்த நீறு.

சவரன்மாறன் போரில் பயன்படுத்தும் வேல் வீரத்தால் அழன்று கோபங்கொண்டதால், கொடிகள் உயர்த்தப்பட்ட மாடங்களை உடைய அழகிய கொடும்பாளூரிலே போரிட்ட பகை மன்னரின் பெரிய மாடங்களைக் கொண்ட மதில்கள் இடிக்கப்பட்டதால், எழும்பிய புழுதி மேலே கிளம்பியதால், பூமியும் தேவர் உலகமும் ஒன்றுயிற்று என்று கூறுவர்.

**வடபுறம்**

15. எண்கி னிருங்கிளையு மேறற் கரியவே
வண்கை நெடுமாறன் வாள்காய்த்தி—விண்படர்வான்
சேய்நாடு தாமூர்ந்த மாநாட கண்ணனூர்க்
கோநாடர் புக்கொளித்த குன்று.

ஆகாயத்தில் அளாவிய வானுகிய சேய்மை உடைய நாட்டினைத் தாம் ஊர்ந்த ஆண் யானைகளை உடைய நாட்டைக் கொண்டவனே! வரையாது கொடுக்கும் வள்ளன்மையுடைய நெடுமாறனுகிய உன்னுடைய வாளைக் கோபிக்கச் செய்து, கண்ணனூரில் நடந்தபோரில், மேதக்க நாடுகளை உடைய பகைவர்கள் ஓடிப்போய் உயிர் தப்புவதற்காக மறைந்த குன்றுகள், கரடிகளின் கருமையான சுற்றத்தாலும் ஏறிச் செல்லுதற்கரிய அருமையான உயரத்தை உடையன என்னலாம்.

**மேற்புறம்**

16. செருவலனு லதனுற் சிந்தியார் போலும்
மருவலராய் வாண்மாறன் சீறக் —— கருவிளை
கண் தோற்ற வண்டரவம் கார்தோற்ற காந்தளூர்
மண் தோற்ற வேந்தர் மனம்.

பகைவர்களுக்குத் துணையாகி வாள் ஏந்திய மாறன் கோபித்ததால் முன்பு கண்களுக்கு உவமையாய் இருந்த அப்பகைவர் நாட்டுக் கருவிளை கண்களுக்குத் தோல்வியுற்றன. முன்பு காராகிய மேகத்துக்கு உவமையாயிருந்த வண்டுகள் மேகங்களுக்குத் தோல்வியுற்றன. காந்தளூரில் மாறனுல் எதிர்க்கப்பட்ட அரசர்களுடைய மனம் தத்தம் நாடுகளைத் தோற்றன. இந்தச் சுவரன்மாறன் போராடுவதில் அத்துணை யளவு ஆற்றல் சான்றவன். அதனுல் பகைவர்கள் அவனுடைய பெயரையும் நினையார்போலும்.

**அடி—தென்புறம்**

17. மலர்ந்ததார் வாண்மாறன் மண்ணண்ணல் வாயில்
கலந்தநாள் காணலாம் காண்க —— உலந்தவர்தம்
எண்பருந்து சூற்பேய் இருந்துறங்க வீழ்குடர்கள்
(புண்ப)ரந்து சிந்தும் புறம்.

மலர்ந்த மாலைகளை அணிந்த வாள் தொழிலில் வல்ல மாறனுகிய மண்புரக்கும் மேதக்கவனும் சுவரன்மாறன் போரிடத்தில் பகைவரைக் கைகலந்த நாளன்று, இறந்து போனவருடைய அறுப்புண்டு வீழ்ந்த குடர்கள் புண் நிரம்பிக் கீழே சிதறிக் கிடக்கும் இடமாகிய போர்க்களத்தில் பல எண்ணிக்கையுடைய பருந்துகள் இருக்கவும் அஞ்சத்தக்க பேய்கள் உறங்கவும் காணலாம். ஆதலின் எல்லோரும் சென்று காண்க. அண்ணல் வாயில்–சித்தன்னவாயில், அவ்வூரில் நிகழ்ந்த போர் என்க.

**அடி—மேற்குப்புறம்**

18. தாழும் புயற்றிங்க ளூர்த்தேவர் மானந் தளரத்தென்னன்
வேழங் களப்பட் டதுகண்ட வேந்தன்மன் பூமலராள்
வாழுந் தடவளைத் தோணெடு மாறன் ... ... ...
... ... ... ... ... ... ... .... ... .... ... ... ...

மேகங்கள் தங்கியிருக்கும் திங்களூரையாண்ட திங்களூர்த் தேவர் என்பவருடைய மானம் கெடும்படிப் பாண்டியனுடைய பட்டத்து யானையைப் போர்க்களத்திலே கொன்று வீழ்த்திய அரசனும், நிலைபெற்ற திருமகள் எப்பொழுதும் தன்னிடத்திலேயே தங்கியிருக்கும்படியான பெரிய வாகுவலயங்களை யணிந்த தோள்களையுடையவனுமாகிய நெடுமாறன் என்னும் பெரும்பிடுகு முத்தரையன்.........

***அடி—வடபுறம்***

19. நாகங்கண் டஞ்சவென் நெஞ்சங்கல் லென்னவொல் லெனக்கடனீர்
மாகங்கொண் டேறிவரத் தாத்தன்மா றன்றுமெங் கோன்வென்று
மாகங்கொண் டானென ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

எட்டுத் திக்கிலுமுள்ள எட்டுக் குலமலைகளும் அஞ்சும்படியாகவும் ஆச்சரியத்தால் என்னுடைய மனம் கல்போல் உணர்ச்சியற்றதாகும்படியாகவும் விரைவாகக் கடலிலுள்ள நீர் சந்தோஷத்தால் பொங்கி ஆகாயம் வரை ஏறி வரும்படியாகவும் தாத்தன்மாறனுகிய எமது அரசர் பெருமான் பகைவர்களை வென்று தேவலோகம் வரையில் எட்டும் புகழைப் பெற்றான்......

***அடி—கீழ்ப்புறம்***

20. நின்றடு வில்லவன் வல்லரண் பல்லவன் செந்தோளெனச்
சென்றிடு சீர்த்தி

தன் எதிரே நின்று போர் செய்யும் சேரனுடைய பகைவர் கவர்தற்கரிய வலிய அரணத்தைப் பல்லவ அரசனுடைய தோள்களைப்போலச் சென்று அழிக்கும் சிறப்பையுடைய.........

***நான்காவது தூண்—ஆசாரியார் அநிருத்தர் பாடியன :***

***மேற்பகுதி—கீழ்ப்புறம்***

21. பாமருவு கின்றயாழ்ப் பாண்மகனே பண்டெல்லாம்
யாமறிதும் எங்கையர்க்கே சொல்லுநீ —— மாமரங்கை
தென்னுடர் காதலியர் தீநாட வாய்சிவந்த
மின்னுடு வேல்மாறன் மெய்.



Birudas of Mutharaiya Chief–Perumbidugu Mutharaiyar alias Suvaran Maran

யான் பரத்தைமை உடையேன் அல்லேன் என்று தலைவன் தெளிவிக்க முயலவும் தெளியாது ஊடி நின்ற தலைவியை ஊடல் தீர்க்க வாயிலாகப் புக்க பாணற்குத் தலைவி சொற்றது.

பாட்டுப் பாடுவதிலேயே பழகுகின்ற யாழ் வாசித்தலை உடைய பாணனாகிய மகனே! மாமரங்கை என்ற ஊரில், தென்னாட்டையாண்ட மன்னர்களது மனைவிமார்கள் தம் கணவர்கள் இறந்த பின்னை உயிர் வாழ விரும்பாது தீக் குளித்தலை விரும்பும்படி வாய் சிவந்துள்ள ஒளிமிக்க வேலை ஏந்திய சுவரன்மாறனாகிய என் தலைவனின் உண்மையை முன்பிருந்தே நாங்கள் அறிந்திருக்கிறோம். என் தங்கை களாகிய பரத்தையர்களிடமே இத்தகைய செய்திகளைக் கூறுவாயாக.

**தென்புறம்**

22\. போலரசு பிறவா (தோன்ரு?) பிறநெடு மேருநெற்றி
பொன்போல் பசுங்கதிர் ஆயிரம் வீசும்
பொற்றேர் பருதிக்கென் போத விடுமே
இணைச்சோதி வீயு விசும்பே.

மேருமலையின் உச்சியிலே, பொன்னைப்போன்ற ஒளிவிடும் கிரணங்கள் ஆயிரத்தை வெளிப்படுத்தும் பொன்னாலாகிய தேரை உடைய சூரியனை ஒத்த இத்தலைவனுக்கு, இவனைப் போன்று மேம்பட்டவேறு அரசர் யாரும் தோன்றப்பெருத, சூரிய சந்திரர் தோன்றி மறையும் தேவருலகம் யாரை உவமை கூறமுடியும்?

**மேற்குப்புறம்**

23\. ... ... ... ... ... ... ... ... ... ... ... .... .... ...
மண்டீது கண்டான்தஞ் சைச்செம் புலநாட்டு வெண்கோடல்
விண்டபோது கொண்டாயர் மலையப் புதுமணல் மீதுசெந்தீத்
தண்டுகண் டாலன்ன கோவங்க ளூர்கின்ற தாழ்புறவே

......பகைவருடைய நாடுகள் அழியும் நிலை அடைதலைச் செய்த சுவரன்மாறனுடைய தஞ்சையை அடுத்த சிவந்த

நிலையுடைய நாட்டிலே வெண் காந்தளின் மலர்ந்த பூக்களை ஆயர்கள் சூடிக்கொள்ள அங்கு ஆறுகளால் அடித்துக் கொண்டு வரப்பட்ட புது மணலில் சிவந்த நெருப்பின் தகடுகளைக் கண்டாற்போல இந்திரகோபப் பூச்சிகள் ஊர்ந்து செல்லும் தாழ்ந்த முல்லைநிலப் பகுதியைக் காணலாம்.

**தென்புறம்**

24. தனமுத லாயமும் பூவையுந்தன் கைக்கிளையும் முன்விட்டு
என்முத லன்புமென் னுகச்செய் தானியக்கத் தைவிண்டார்
வனமுதல் சாரக் கருங்கைப் பகடுய்த்த மாறன்தெவ்வர்
கணமுதல் ... ... ... ... ... ... ... ... ... ...

தனது பகைவர்கள் காடுகளுக்கு ஓடும்படியாகத் தனது வலிய துதிக்கையையுடைய யானையைச் செலுத்திய சுவரன் மாறனுவான், தனது முற்பட்ட சிறப்பையுடைய அமைச்சர் முதலிய குழாங்களும், தன் கோப்பெருந்தேவியும், தன் பக்கலிலுள்ள சுற்றத்தவரும், என்முன் தன் செவ்வி நோக்கி யிருப்பவும், அவர்களை விட்டு, மிக எளியனுகிய என்னிடத்து அன்பை எப்படிக் காட்டினுன்!! அவன் எம்மிடம் காட்டிய அன்பை எங்ஙனம் பாடுவேன்? என்றபடி.

[ T. V. G. ]

# செந்தலைக் கல்வெட்டுக்கள்

ஒரு சில

Inscription No. 1.

(A. R. No 56 of 1897)

Eulogy on TIPPARAJA

श्रवणे दिशति सहस्रं
    दृक्पाते दश सहस्रधनमात्रम् ।
सल्लापितेत्वपरिमितं
    संतोषे किं वदामि तिप्पेन्द्रः ॥

गोपुरमंतः पुरमपि
    नूपुरमपि नैव विद्विषाम् ।
सहसे श्री तिप्पनृपते
    त्रिपुरांतक नाम तेन ते सार्थम् ॥

गोपेद्रं तिप्पभूपाल
    कीर्ति कान्ता घनोरसि ।
ब्रह्मांडानि सदा हार
    मौक्तिका............ ॥

1 காதால் கேள்விப்பட்ட சமயத்தில் 1000த்தைக்கொடுக்கிறார்
கண்ணில்பட்டால் 10 ஆயிரத்தை அளிக்கிறார்,
ஸல்லாபம் செய்தால் அளவற்றதை அளிக்கிறார்
சந்தோஷமேற்பட்டால் எவ்வளவு கொடுப்பார்
என்பதைப்பற்றி
யான் என்ன கூறுவேன் (**திப்பராஜனே !**).

2 தாங்கள், சத்ருக்களின், கோபுரவாயிலேயும், அந்தப் புரத்தையும்,
(எதிரிஸ்திரீகளின்) பாதச்சிலம்புகளேயும் பொறுப்பதில்லே. இதனல் **திரிபுராந்தகர்** என்ற தங்கள் பட்டமானது பொருத்தமுள்ள அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

3 ஹே கோபேந்திர **திப்பபூபாலரே,** தங்களுடைய புகழானது சர்வலோகங்களிலும் வியாபித்து, தங்கள் மனேவிமார்களின் மார்பிலுள்ள முக்தாஹார மாகவும் பரிணமித்து இருக்கிறது.

Inscription No. 2

Second Gopuran - Sundareswarar Temple.

A. R. No. 57 of 1897.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [11.] ... ... ... ... த்திகள் ஸ்ரீபோசல வீர ராமநாத தேவர்க்கு யாண்டு 10-வது கற் கட க நா (யற்று)

2 த்து [ஏ] கா தசி ......... யும் பெற்ற உரோசணி நாள் பாண்டி குலாசனி வள நாட்டு விளா நாட்டு உடை.........

3 ணே க்காவு ஞ ........... [திரு] வெண்ணுவல் [கி] ழ். இனி தமர்ந்தருளிய திரிபுவன பதிக்கு மூல ப்ருதயராகிய ஆ.........

4 ரதெவர் கந் [மிகளு] ......... தெவ தானம். இந்நாட்டு ஆர் [கா] ட்டுக் கூற்றத்து ............... ஆழிங்குடியில் ஆழிங்குடையா ...........

5 வாயிலுடையார்க்கும் பலகையில் அரிசி விடு............ நாயமாரில் தங்களூரில் உடையார், காக்கு நாயகர் ......... ...

Inscription No. 3

Stone built into the floor – First Prakara.

(A. R. No. 58 of 1897)

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [11] —

2 கோ இராஜகெ —



Inscription of Suvaran Maran–Genealogy of the Mutharaiyars

3 ஸ (ரி) பர்மக்கு
4 யாண்டு 17
5 ஆவது நங்கை
6 ஒளி மதியார் தா —
7 யார் நக்க னீலி
8 ஒரு திருவ மிது
9 க்கு வைத் த பொ —
10 [ன்] 10 ஒ * இப்
11 பொன் கொண் —
12 டு கட வொம் வ —
13 வ ட வா ச் சாலைப் .....
14 [பெ] ரு மக்க ளே [ா]
15 ம் இப் பொன்னு —
16 க்குப் பலி
17 [சை] ங்சதி குறுணி
18 நெல்லால் ஒ —
19 ரு திருவமிது
20 இது செலுத் ... ... ... ...

Inscription No. 4.

North wall — Central shrine.

(A. R. No 59 of 1897)

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பர கெஸரி வம்மக்கு யாண்
2 டு 4 — ஆவது ஆ [ர்] க் காட்டுக்கூற்றத்துப்ரும்மதேய—
3 ம் சந்தரலே (கை) சதுர்வேதி மங்கலத்து
திருப்பெருந்துறை
4 மஹா தெ வர் க் [கு இவ்] வூர் வைத்ய [ஞ] த
கோமபுறத்துகாம
5 [க் கோடி க்ர ம வித்த] ஞன உத்தமசித்த பிரம்மாதி
6 ராஜன் வைத்த பகல் விளக் கொன் [றிற்] க்கு
வைத்த ஆ —

---

* ஒ கழஞ்சியின் அடையாளம்.

7 டு சங்ராதி [த்*] தவற் சாவா மூவா ப்பெராடு $\frac{45}{\text{நாற்ப-}}$
8 (ப) த் தைஞ்சும் இவ னே தெசவிடங்கர் பூண்

Inscription No. 5.

North wall

(A. R. No. 60 of 1897).

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [11*] கொலோத்துங்கசொழதெவற்கு யாண்டு நாற்—
2 பத்து நாலாவது பாண்டி குலாசனி வள நாட்டு ஆற்கா —
3 ட்டு கூற்றத்து ப்ரும்மதே யம்.............. ச் சருப்பெதி -
4 மங்கலத்து திருப்பெருந்...........டைய மா தேவற்கு
5 சனி தொ றும் திருவெண்ணை [க்காப்பு] சார்த்தி அருளவும் அமு-
6 து செய்தருளவும் சனி ஒன் றுக்கு என்னை உழக்கும் அரி—
7 சி நா நாழியும் கறியமுது உட்படவும் நெல்லு..............
8 ............நா நாழிக்கு உ [ள்ளூர்] தேவ தானத்தில் பல திடலி
9 ல் கல்வி கணவதி மயக்கலில் கிழக்கடைய விட் —
10 ட நில [ம் *] அரை மா முந்திரி கைய்க்கும் ஊர்க்காலால்
11 தூணிப்பதக்கு நெல்லு இறுத்து இதிலிறைமி
12 கு தி கொண்டு எண் ணைக்காப்பு சார்த்தி அமு [து[*]செ-
13 ய் தருள இந்நிலந் திருத்தி விட்டேன். வடகரை
14 ஜய தர புரத்திருக்கும் சங்கர பாடியான் படி—
15 ய சோலை அரைசான குலோத்துங்க சொ—
16 ழ மாயிலட்டியேன். பன் மா யெ சுர இர [க்*]
17 ஒ ஒ க்ஷ

Inscription No. 6.

North wall

(A. R. No. 61 of. 1897.)

1 ஸ்வஸ்திஸ்ரீ [11*] கொ ராஜகெஸரிவன்மக்கு யாண்டு 2வது ஆற்காட்டுக்கூ [ற்*] றத்து

2 பிரும்மதேயம் சந்தர லெகை சதுர்வே திமங்கலத்து திருப்பெரும்துறை மகா தேவர்க்கு

3 ஏய் ஞட்டு கடம்பூர் உடை(ய்)யான் காளிகெச(ன்)னும் காளி மாற(ன்)னும் காரி திரு வெண்—

4 காட் [ட] டிக (ள்) ளும் இவ்வனை வோம் கடம்பூர் உடை(ய்)யான், காளி காரிக்கு ஆக வைத்தவிள[*]க்கு-க-

5 ஒன்றுக்கு வச்ச பொன் 15-௸* இப்பொன் பதி (ன்) ஐங்கழைஞ்சின் பலிசையால் நிசதம் உழ —

6 கு நெ (ய்) யால் ஒரு நொந்தாவிளக்கு சந்தராதித்தவல் எரிப் பொ (ம்) மா நொம் இத்திரு (கொயி) —

7 (ல்) (லு) டை யொம் எங்கள் முறைநாளால் எரிப்பொமா ஞேம் ஸபையும் பன்ம (ா*) ஹேஸ்வரரகைஷ (11*)

Inscription No. 7

North wall

(A. R. No. 62, of 1897).

1 ஸ்வஸ்தி ஸ்ரீ (11*) கொராஜ கெஸரி வன்மக்கு யா(ண்)டு 3-வது ஆர்க்காட்டுக் கூற்ற (த்)

2 து ப்ரும்மதே யம் சந்தரலெகை சதுர்வே திமங்கலத்து திருப்பெருந்துறை ம ஹ (ா*) தெ —

3 வர்க்கு திருமங்கலத்து காலாவன் சேந்தன் நந்தியேன் உடை —

4 மை யர் பகவன் சக்தி பெரா லும் முன் நூற்றுவன் (தெ)தச விடங்கந்பெரா லு —

5 ம் கிடக்கும் கையெழுத்தோலையால் கடவ பொன்னுலும் நெல்லா லும்

6 ஏற்றி வந்த பொந் முதல் 30 ௸ இப்பொன் முப்பதிந் கழைஞ்சிந் பலி —

7 சையால் நிசதம் உழக்கு நெ(ய்) யால் ஒரு நொந்(தா) விளக்கு ச்ந்தராதி த்த வல் எ —

8 ரிப் போ மா நே(ா)ம் இவ்விரு வோம் ஸபையு(ம்) பன்மா ஹேசுவரரகைஷ

---

௸* கழஞ்சியின் அடையாளம்.

Inscription No. 8. West wall

(A. R. No. 63 of 1897)

1 கோராஜ கேஸரி வன்மாக்கு யாண்டு (9)ஆ(வது) ஆர்(க்) காட்டுக் கூற்றத்து பிரும்மதேயம் சந்தரலேகை

2 சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி ஸபையோம் இவ்வூர் ஜ—

3 ம் பத்து மூன்றுங் குடும்பில் ஹாரத பங்கு கொயிலாங் நாகனந்தி விற்ற பங்கு — க-இ

4 வ்வொரு பங்கும் இவ்வூர் பிரும்மஸ்தா நத்துமீய் செங்கிளி நாட்டு வெண்ணுயிலுடை—

5 யான் வயிர(ம்)மெக(ம்)படாரன் எடுப்பித்த அம்பலத்து இருந்து நிசதியும் ஸ்ரீ —

6 பாரதம் வாசிக்க பெரும்புலியூர் ஆத்ரேயகோத்திரத்து வைகாநஸ ஸூத்ரத்துசி (ங்கி)

7 நந்தீசுவரபட்டனுக்கு இறை இலியாக குடுத்தொம்ஸபையொம் இவ நிலம் பி

8 ன்பு இப்பங்குண்பார் இவ்வூர் பிரம்மஸ்தா நத்தே இருந்து நிச தியும் ஸ்ரீ பாரதம் வாசி—

9 த்துண்பதாக இப்பங்கொன்றும் சந்த்ரா தித்தவத் இறை இலியாக பணித்து கல்மேல்

10 வெட்டி குடுத்தொ(ம்) பெருங்குறிஸ பையோம்.

Inscription No. 9.

West wall

(A. R. No. 64 of 1897).

1 ஸ்வஸ்தி ஸ்ரீ (11) திருமன் னி வளர இரு நில மட —

2 ன்தெயும் ெ(பா)ர்ச்சயப் பாவையும் சிர்த்த நி

3 (ச்) செல் (வி) யு (ம்) தெங்பெருந்தேவியர்(ந)ாட இங்பு

4 ற நெடுதிய லூழியுள் இடைதுறை நாடும் து —

5 டர் வன வெலிப்படர் வன வ(ா*)சியும் சுள்ளி (ச்)

6 சூள் மதிள் க் கொள்ளி ப் பாக்கையும் நண்ணர்க் (க)

7 (ரு) முரண் மண்ணை க்க (டக்க *) மும் பொருகடல் ஈ(ழ) த்தரை(யர்)

8 (தமுடியு)ம் அங்கவர் தே(வியரே )ாங் கெழில் முடி(யும்)மு—

9 ங் நவர் பக்கல் தெ(ங்) நவங் வைத்த சுந்தரமுடியும் இந்திர நாரமும் தெ —



Inscription of Nandivarman III who won a victory over the enemy on the banks of the river **Tellaru.**

10 ண்டி (ரை ஈ) ழ மண்டலமுழுவதும், எறிபடைக
கெரளர் முறை மயில்

11 (சூடு) ம்குல (தன)மாகிய பலர் புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்(கு)

12 திர் வெ (லை)........ல் பெருங்காவல்ப் பல் பழந்தீவும்
செருவில் ச் சினவில் இரு பத் [தொ] —

13 ரு (கால்) அரை சு (களை) கட்ட பரசு ராமந் மேவருஞ
சாந்தி மத்தீ வரண் கருதி இரு(த்தி)—

14 ய செம்பொற்(திரு)த்தகுமுடியும் பயங்கொடு பழிமிக
முயங்கியில் மு(து)

15 .........சிங்(கந)ளப்பரம் புகழொடு மடியில் இரட்டபாடி
எழரைஇ—

16 .........நெதி (கு)லப் பெருமலைகளும் விக்ரமவீரர் சக்கர
கொட்டமும்

17 .........காமிடை வள(ர்*)நாமணை க்கோணையும் வெஞ்சி

Inscription No. 10.

South wall, Central Shrine

A. R. No 6 of 1899.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ (11) பாண்டியன் தலைகொண்டகோப்
(பரகேஸ)ரி வன்ம(ர்)க்கு யாண்டு

2 4-ஆவது ஆற்க்காட்டு கூற்றத்து ப்ரும்ம தேயம் சந்த்ரலெ
கை சதுர்வேதி மங்கலத்து) திருப்பெரும்—

3 துறை மஹாதேவர்க்கு பெருவளத்து கொடன் தூர்
நாராயணன் குமார ச(ர்ம்ம)ன் சந்த்ராதி (த்)த

4 வல் நிசதம் ஒரு படி (படி) எண்ணையால் மூன்று சந்தி
(யு)ம் விளக்கெரிப்பதற்கு

5 குடுத்த நிலம் ஆதித்தவதிக்கு கிழக்கு 6—ஆங்(கண்)ணு
(ற்)று சந்தரலெகை

6 (வாய்க்கால்)லுக்கு வடக்கு க—சதிரத்து மேக்கடை........
வில வடக் கடைய கு (மி)—

7 ...ஆரிதன் கந்தன் மாதேவன் பக்கல் (விலைகொண்டு)
டைய

8 ல் தெற்கடை மாச்சேயின் போகத்தல் எரிப்பதாகவும்
(நி)

9 ன்ற 4-மாவின் போகத்தில் ஸ்ரீ கோயில் கணவதியார்க்கு
10 திங்கள் (தோ)றும் உத்திர(த்)திங் நான் றுநாழுழி அவலும் ஒரு தேங்காயும் அமு—
11 து செய்வ தாகவும் மிக்கிது கொண்டு சித்திரை உத்தர (த்)திங்நான்று அமுது
12 செய்வதாகவும் இதுஸ பையு(ம்) பன்மாஹெ சுவரரும் ரமெக்ஷ

Inscription No. 11.

Wall — Outer Gopura.

A. R. No. 7 of 1899.

1 ஸ்வஸ்திஸ்ரீ (11*) கோப்பர கெஸரி வர்மற்கு யாண்டு 10வது க —
2 **ற் குடிப்பள்ளியுடைய** ஆரம்பவீரனேன் கையெழுத்து **வடகவிர** நாட்டு
3 பள்ளியுடைய கனக (ஸெ)ன படாரர் கைய்யால் யான் கொண்டு கடவ (ஈ)ழ.........
4 இக்காசு நூற்றைம்பதுங் கொண்ட பரிசாவது காசின் வா(ய)ப்பூவழி கலநெல்லு.........
5 பொலிந்து கார்ப்பலிசை 150 — ஈ (**கலத்தைக்குறிப்பது**) நூற்றைம்பதின் கலமுங்......
6 இவ்வூர் **வீர சிகாமணிப்பேரேரிக்கு** அட்டி கல்லு விப்பதாகவும் —
7 ய் 150 — ஈ நூற்றைம்பதின் கலமும் இவ்வாட்டைச் சித்திரை.........
8 யு மட்டி கல்லுவிப்பதாகவும் இவ்விரண்டு பலிசையுமெற்றி வந்த நெ.........
9 கல நெல்லு மறவட்டி ஆட்டை வட்டமும் வீரசிகா மணிப்பெரெரி க .........
10 டென். இப்பள்ளியுடைய ஆரம்ப வீர னென் வட கவிர நாட்டு———

1 ——— பலிசை நெல்லும் இவ்வீரசி———
2 ——— ள்ளியுடைய கனக ஸெனபடார ———

3 ——— பரகெஸரி வர்மற்கு யா———
4 ——— (ணி)யுடைய ஆரம்ப விரனென் ———
5 ——— ய கனகஸென படாரர் கைய்ய ———
6 ——— கொண்ட பரிசாவது காசின்வாய் ———
7 ——— ண்டு பலிசையு மெற்றி வந்த ———
8 ——— முற் பக்கத்து ஸ்ருதமந்த்ர ———

Inscription No. 12.

Right of entrance-Vigneswara Shrine

A. R. 8 of 1899

1 ஸ்வஸ்தி ஸ்ரீஸ்ரீ ம
2 து சாயண
3 உடையாற்
4 கு அஞ்சா
5 வது சந்தி
6 ர ரேகையி
7 ல் திருப்பெரு
8 ந்துறை உடைய
9 ார் கோயிலி
10 ல் பிள்ளைய
11 ார் கோயில்
12 திக்கம நாயக்
13 கர் மகன் அ
14 ன்னமா நாய
15 க்கர் தன்ம
16 ம்.

Inscription No. 13.

Left of entrance Vigneswara Shrine

A. R. No 9 of 1899

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோமா
2 றஞ் சடையற்குய
3 ாண்டு 19 ஆவது தி
4 ருப்பெருந்துறை ம
5 ஹா தேவர்க்கு கரிக்கு
6 டி சாந்தோ கரணி நாரா
7 யணன் மாறன் ப்ராஹ்ம
8 ணி நீலி நாரணி பக
9 ல் விளக்கு எரிப்ப
10 தாக வைத்த பொ
11 ன் எண் கழஞ்சு
12 இப்பொன் கொ
13 ண்டோம் இத
14 ன் பலிசையால்
15 பகல் விளக்கு
16 எரிப்போமா
17 னோம். திருப்பெ
18 ருந்துறை திரு

| | | | |
|---|---|---|---|
| 19 | க்கோயிலுடை | 22 | ம் மாஹேசுவர |
| 20 | யோம் இவ்வூ | 23 | ரும் இரக்ஷை |
| 21 | ரோம் பெருமக்களு | | |

Inscription No. 14.

Frist Pillar in the Mandapa

A. R. No 10 of 1899

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாறஞ்ச
2 டையற்கு யாண்டு 10—ஆ
3 வது விடேல் விடுகு முத்தரை
4 யன் அடியான் கீட்காவன் காந்த
5 ன் நியமமாகாளத்துப் பிடாரி
6 யார்க்கொரு திருவிளக்கினுக்
7 கும் ஒரு திரு வமுர்துக்கு மு
8 தலாக இப் பிடாரியார்உள்
9 ளூர்களில் கல்லிக் குடுத்த
10 நிலம் அறைக்காணிக் கடன்
11 ஐ (நிலம்) 50. இது பன் மாஹேசுவ
12 ர ரக்ஷை

Inscription No 15.

I Pillar Mantapa.

A. R. No. 11 of 1899.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஸ்வஸ்தி ஸ்ரீ | 9 | நியம மா |
| 2 | யாண்டு 12 | 10 | காளத்து |
| 3 | ஆவது தெ | 11 | பிடாரியா |
| 4 | ள்ளாற்று | 12 | ர்க்கு |
| 5 | எறிஞ்ச | 13 | 40 (400) ப |
| 6 | நந்திப் | 14 | முங்கா |
| 7 | போத்த | 15 | சு குடு |
| 8 | ரையர் | 16 | த்துவி |

# SENDALAI



Inscription of the 9th year of Rajakesarivarman, (alias) Aditya I i. e. 880 A. D. It makes provision for the expounding of Sri Mahabharatham by making a gift of one **pangu** in the 53rd **Kudumbu** (i. e. ward) of **Chandralekhai - Chaturvedimangalam** (modern Sendalai).

17 ஸ கொ
18 ண்டு நிச
19 தி முக்கு
20 ருணிநெ
21 ல்லாக
22 ஒரு திரு
23 வமிதினு
24 க்கும் ஒ
25 ரு நொந்
26 தா விளக்
27 கினுக்கு
28 ம்
29 வச்சுரி
30 லம் மா
31 ளி கை
32 உடையா
33 ன் வே
34 லி இது
35 காத்தா
36 னடி எ
37 ன் தலை
38 மேலி
39 ன

Inscription No 16.

IV Pillar — Mantapa.

A. R. No. 13 of 1899.

1 ஸ் வஸ்தி ஸ்ரீ கோராச
2 கேசரி பந்ப ற்கு யாண்
3 டு யஅ (18) நியம
4 மாகாளத்து
5 ப் பிடாரியா
6 ர்க்கு ஒரு
7 நொந்தா
8 விளக் கெ
9 ரிப்பதற்கு
10 மாறம்
11 பாவை வ
12 ய்த்த பொ
13 ன் 12௳ (கழஞ்சு)
14 இப் பொ
15 ன் பன்னிரு
16 கழஞ்சு
17 க
18 — தற்குத்
19 துத்திரி
20 இட்டெரிப்
21 பதாக இ
22 ப் பொன்கொ
23 ண்டோம்
24 பிடாரியா
25 .........
26 .........
27 நன் றியாதே
28 வனுந் நன்
29 றி எழுவனு
30 நந்தவன
31 க்குடி சிறப்
32 பனர்.

Inscription No 17.

South wall - Central shrine

A. R. No. 14 of 1899

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரையும் ஈழமும் கொண்ட கோபரகேசரி பன்மற்குயாண்டு.

2 (ம)ஹா தேவர்க்கு இவ்வூர் அம்பர் நாட்டு பட்டராகிய திருக்கடவூர் காச்சுவன் புவனசேகரன்......

3 சாங் கண்ணுற்றுக் **கடுங்காலுக்கு** தெற்கு முதற் சதிரத்து வடக்கடைந்த நான்மா வரையில்மே.

4 கம் கொண்டு சந்திராதித்தவற் பெருந்திரு வமுது செய்ய குடுத்தேன். புவனசேகரன் மாற...

5 த்து சபையோம் இது சபையும் பன் மாஹேசுவரரும் ரக்ஷை.